**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.49/2025 – PW- 4**

| | |
|---|---|
| Name | திரு. கோவிந்தராஜ் |
| Husband/Father Name | அர்ஜீனன் |
| Village /Area | கீரைச்சாத்து |
| Taluk | பொன்னை |
| Occupation | விவசாயம் |
| Age | 76 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 13.11.2025.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும் அவர் எனது ஊர்காரரர் தான். கடந்த ஒரு ஆண்டுக்கு முன்பு நான் வீட்டில் தூங்கிக்கொண்டிருந்த போது காவல் துறை ஆய்வாளர் வந்த என்னிடம் கீரைச்சாத்து கிராமத்தில் நடந்த சம்பவத்திற்காக என்னிடம் கையொப்பம் கேட்டார் நான் கையொப்பம் போட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலவாது சாட்சி கையொப்பம் என்னுடையது தான் அது **அதசாஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான் அது **அதசாஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் என்னுடைய கையொப்பத்தை கோவிந்தன் என்று தான் அனைத்து ஆவணங்களிலும் பதிவு செய்வேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்து

வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியும் அவர் என் ஊரை சேர்ந்தவர் தான். அவர் பெங்களூரில் வசித்து வருகிறார். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னிடம் கையொப்பம் எந்த தேதியில் வாங்கப்பட்டது என்றால் பொங்கல் சமயத்தில் தான் வாங்கப்பட்டது. வழக்கு சம்பந்தமாக எந்த விவரமும் எனக்கு தெரியாது. போலீசார் கையொப்பம் இட சொன்னதன் அடிப்படையில் நான் கையொப்பம் இட்டேன். மற்ற படி எனக்கு எதுவும் தெரியாது.

**<u>மறு விசாரணை:</u>** இல்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.11.13 18:29:17 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.